# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

<u>ஆணை நாள் 10.11.2020</u>

**<u>முன்னிலை</u>**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 7691/B/2019</u>**

| | | |
|---|---|---|
| திரு. K.M. ஆரி | | மேல்முறையீட்டாளர் |
| பொது தகவல் அலுவலர்,<br>தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>குந்தா வட்டம்,<br>நீலகிரி மாவட்டம். | எதிர் | பொது அதிகார அமைப்பு |

**<u>ஆணை</u>**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு. K.M.ஆரி அவர்களுக்கு பல முறை தொலைபேசியில் தொடர்பு கொண்டும் அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை. பொது தகவல் அலுவலர், திரு.சங்கர் கணேஷ், குந்தா வருவாய் வட்டம், நீலகிரி மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 5.4.2019 தேதியிட்ட மனுவில், குந்தா வட்டம், இத்தலார் உள்ளிட்ட நில அளவர், திரு தேவராஜ் என்பவர் தனது வீட்டை நில அளவை செய்தது தொடர்பாக 1 முதல் 8 இனங்களில் தகவல் கோரி, தலைமையிட்த்து துணை வட்டாட்சியர், குந்தா வட்டம், நீலகிரி மாவட்டம் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. பொது தகவல் அலுவரால் பதில் கிடைக்கப் பெறாததால், மனுதாரர், 29.05.2019 தேதியிட்ட மனுவில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் தகவல் பெறப்படாததால் தகவல்களை பெற்றுத்

தருமாறு தெரிவித்து, மனுதாரர் 02.08.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையின்போது, மனுதாரரரை பல முறை தொடர்பு கொண்டபோதும் மனுதாரர் அழைப்பை ஏற்கவில்லை. மனுதாரரை தொடர்பு கொள்ள முடியாத நிலையில் பொது தகவல் அலுவலர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், குந்தா வட்டம், நீலகிரி மாவட்டத்துடன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. பொது தகவல் அலுவலர் மனுதாரருக்கு உரிய தகவலை ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அதன் நகலினை ஆணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டார்.

5. பொது தகவல் அலுவலர், 9.11.2020 தேதியிட்ட கடிதத்தின் மூலம் பதிவஞ்சலில் மனுதாரருக்கு தகவல் வழங்கி, அதன் நகலினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். . பொது தகவல் அலுவலர், தகவலை மனுதாரருக்கு அளித்து, மனுதாரருக்கு அளித்த தகவல் அறிக்கையின் நகலினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

**6. அதனை பரிசீலனை செய்கையில், பொது தகவல் அலுவலரால் மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டது என்பதை ஆணையம் ஏற்று, இந்நேர்வில் பொது தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல் திருப்தியளிக்காதபட்சத்தில், பிரிவு 18(1)ன் கீழ் புகார் மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்து, உரிய பரிகாரத்தை தேடிக் கொள்ள மனுதாரருக்கு ஆணையம் அறிவுறுத்தி, இவ்வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.**

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 7691/B/2019</u>**
**<u>பெறுநர்</u>**
பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
குந்தா வட்டம், நீலகிரி மாவட்டம்.

<u>மனுதாரர்</u>
திரு.K.M. ஆரி,
த/பெ முத்தாகௌடர்(லேட்),
1/97, கெட்சிகுட்டி கிராமம்,
தொட்டக்கொம்பை அஞ்சல்,
குந்தா, நீலகிரி மாவட்டம்.
அலைபேசி - 99658 57391.

Copy to: File
SSPA-16.11.2020